

1911-ஆம் ஆண்டு அன்னையார் தென்னிந்திய யாத்திரை மேற்கொண்டார். இராமேஸ்வரத்தில் சிவ பெருமானை வழிபடும் போது, "ஆஹா, அன்று நான் எப்படி வைத்தேனோ, அப்படியே இப்போதும் இருக்கிறார்". என்று முணுமுணுத்தார். இதன் மூலம் திரேதா யுகத்தில் சீதையாக இருந்து சிவனை வழிபட்டது தாமேஎன்பதை வெளிப்படுத்தினார்.

The Holy Mother visited South India in 1911. At Rameshwaram during the worship of Lord Shiva, she whispered; "Oh, He is still in the same way as I had kept Him" indicating that it was she who worshipped Him as Sita in Treta Yuga.



பிற்காலத்தில் அவரை அம்பிகையாகவும் குருவாகவும் அனைவரும் வழிபட்டபோதும் தம் சீடக் குழந்தைகளுக்காகச் சமையல் மட்டுமன்றிக் கீழான வேலைகளையும் கூடத் தாமேசெய்தார். “வேலை செய்வதன் மூலமேஒருவன் தன்னைக் கர்மத் தளைகளிலிருந்து விடுவித்துக் கொள்ள முடியும். அப்போது தான் அவன் ஆசாபாசங்களிலிருந்து விடுபட்டவனாவான். சிறிது நேரம் கூட வேலை செய்யாமல் இருக்கக்கூடாது” என்பது அன்னையின் அறிவுரை.

In later years, even though she was respected and worshipped as the Divine Mother and Guru, she would do even the most menial work apart from cooking for all her disciple-children. Her advice was: "It is through work alone that one may break asunder the bonds of Karma; only then one becomes free from desires. One should not be without work even for a single moment."



அன்னையின் உபதேசங்களெல்லாம் எளிமையானவை, நேரடியானவை, ''பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகளை எப்போதும் செய்து கொண்டிரு. ஆனால் இறைவனுக்கே உன் அன்பைக் கொடு. உலகியல் அன்பு சொல்லொணாத் துன்பத்தையே தரும்''. என்றும் ''பிரார்த்தனை செய்யும் பழக்கமுடையவர்கள் எல்லாத் துன்பங்களிலிருந்தும் விடுபட்டு, வாழ்க்கையின் நெருக்கடிகளுக்கு இடையிலும் மன அமைதியுடன் இருப்பார்கள்'', என்றும் அவர் கூறுவார்.

Holy Mother's teachings are very simple and direct. She would say, "Always do your duty to others, but love you must give to God alone. Worldly love always brings in its wake untold misery." "One who makes a habit of prayer will easily overcome all difficulties and remain calm and unruffled in the midst of the trials of life."



தூய அன்னை கூறினார்:

"ஆசையே எல்லாத் துன்பங்களுக்கும் மூலகாரணமும் முக்திக்குப் பெருந்தடையும் ஆகும். மீண்டும் பிறப்பதற்கும் இறப்பதற்கும் இந்த ஆசையே காரணமாகிறது. இறைவனை அடைவது மட்டுமேஉன் ஆசையாக இருக்கட்டும்".

Holy Mother said. "Desire alone is at the root of all suffering and is an obstacle in the way of liberation. It is the cause of repeated births and deaths. Your sole desire should be for realizing God."